بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *12/12/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**திருக்குர்ஆன், மாநபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் ஒளியில் தப்லீக் தொடர்பான பொன்னான அறிவுரைகள்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ ـ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ ـ

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

إِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

اُدۡعُ اِلٰی سَبِیۡلِ رَبِّکَ بِالۡحِکۡمَۃِ وَالۡمَوۡعِظَۃِ الۡحَسَنَۃِ وَجَادِلۡہُمۡ بِالَّتِیۡ ہِیَ اَحۡسَنُ ؕ

اِنَّ رَبَّکَ ہُوَ اَعۡلَمُ بِمَنۡ ضَلَّ عَنۡ سَبِیۡلِہٖ وَہُوَ اَعۡلَمُ بِالۡمُہۡتَدِیۡنَ ﴿۱۲۶﴾

பொருள்: நீர் நளினமாகவும், அழகிய அறிவுரையைக் கொண்டும் உம் இறைவனின் வழியில் அழைப்பீராக! மேலும் அவர்களுடன் மிக அழகிய முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வீராக! அவனுடைய வழியிலியிலிருந்து தவறியவர்களையும், நேரான வழியில் இருப்பவர்களையும் நிச்சயமாக உம்முடைய இறைவன் நன்கறிகின்றான். (16:126)

**திருக்குர்ஆனில் அல்லாஹ் மிகவும் அழகிய முறையில் தப்லீக் செய்யுமாறும், அது பிறரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும், பயனும் தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருக்கின்றான். அதன்படி அமல் செய்பவர்கள் அல்லாஹ்வின் அருளால் கணிசமான அளவிற்கு வெற்றியும் பெறுகின்றனர்.** எனவே, இந்த அடிப்படையை எப்பொழுதும் நம் முன்னால் நிறுத்த வேண்டும்.

இன்றைய நாள்களில் சமூக ஊடகங்களின் காரணமாக, தப்லீக் செய்வது மிக எளிது என்று மக்கள் கருதுகிறார்கள். ஆனால், தப்லீக் செய்வதற்கும் சில நிபந்தனைகளும் ஒழுங்குமுறைகளும் உள்ளன. அவற்றை எப்பொழுதும் நம் முன்னால் வைக்க வேண்டும். இல்லையென்றால், எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டு விடுகிறது. எனவே நாம் செய்யும் தப்லீகை அழகிய முறையில் செய்ய வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) தப்லீக் தொடர்பாக ஒரு மிக முக்கியமான வழிகாட்டலை வழங்கினார்கள். அன்னார் கூறுகிறார்கள்:** இஸ்லாமிய போதனைகளைப் பற்றிய முழுமையான அறிவு கொண்டிராதவர்கள், அதனுடைய உயர்தரமான சிறப்பம்சங்களைப் பற்றி முற்றிலும் அறியாதவர்கள் மற்றும் தற்காலத்தின் ஆட்சேபனைகளுக்கான பதில்களை வழங்குவதில் முழுமையான முறையில் மேலோங்காதவர்கள், மேலும் இறைவனிடமிருந்து அறிவைப் பெறாதவர்கள் என் சார்பாக பிரதிநிதிகளாகிச் செல்வதை நான் ஒருபோதும் பொருத்தமானதாகக் கருதுவதில்லை. அன்னார் மேலும் கூறுகிறார்கள்: என் முபல்லிகுகளுக்கு அல்லாஹ்வுடனும் ஒரு சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்வான்.

**தப்லீக் குறித்து நாம் நினைவில் வைக்க வேண்டிய முதல் விஷயம்** என்னவென்றால், அனைத்து உலகத்திற்குமான அல்லாஹ்வின் தூதுச் செய்தியை கொண்டு வந்த ஒரே மார்க்கம் இஸ்லாம் ஆகும்; ஒரே நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அல்லாஹ் அன்னாரை அனைத்து மக்களுக்கும், முழு உலகத்திற்கும், எல்லா சமுதாயங்களுக்கும் நற்செய்தி வழங்குபவராகவும் எச்சரிப்பாளராகவும் அனுப்பினான்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தப்லீக் செய்யுமாறு கட்டளையிட்டுள்ளார்கள்; மேலும், அதற்கு சில வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளார்கள் என்பதை எப்பொழுதும் நம் முன்னால் நிறுத்த வேண்டும்.** மக்களிடம் அவர்களின் அறிவுக்கு ஏற்றார் போல் பேச வேண்டும் என்று ஒரு கட்டளை வழங்கினார்கள். அநீதிக்குள்ளானவரின் பத் துஆவிலிருந்து (சாபத்திலிருந்து) பாதுகாப்பாக இருப்பதும் ஒரு முக்கியப் புள்ளி ஆகும். தப்லீக் செய்பவர்களின் சுயஒழுக்கம் எப்பொழுதும் சிறந்ததாகவும் மேலானதாகவும் இருக்க வேண்டும். மேலும், அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் தரம் எப்படி இருக்க வேண்டும் என்றால், அவர்கள் ஒருபோதும் எந்த அநீதிக்குள்ளானவரின் பத் துஆவிற்கும் (சாபத்திற்கும்) ஆளாகக் கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: ஏன் தப்பித்திருக்க வேண்டுமெனில், (அநீதிக்குள்ளானவரான) அவருக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் எந்தத் தடையும் இல்லை.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:-* ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பொய்யான குற்றச்சாட்டுகளை நுட்பமான ஞானத்துடனும் அழகிய அறிவுரைகளோடும் களைவதை இறைவன் நம் மீது கடமையாக்கி விட்டான். நம்முடைய தப்லீக் ஒழுக்கத்தின் வட்டத்திற்குள் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**சில மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கடுமையை வெளிப்படுத்தி இருக்கிறார்களே என்று கூறி விடுகிறார்கள்.** முதல் விஷயம், ஹுஸூர் (அலை) அவர்கள் கடுமை காட்டவில்லை. ஹுஸூர் (அலை) அவர்கள் தம்முடைய பல்வேறு நூல்களில் கடுஞ்சொற்கள் பயன்படுத்துவதை விட்டும் ஜமாஅத்தைத் தடுத்துள்ளார்கள். மேலும், "சில இடங்களில் நான் இந்த சொற்களை சில நிர்பந்தங்களினால் பயன்படுத்தியுள்ளேன்" என்றே கூறியுள்ளார்கள். அன்னார் அந்தக் கடுமைகளில் அவர்களுடைய வரலாற்றைப் பற்றி பேசியுள்ளார்கள். அவர்களைப் போன்று ஏசிப்பேசவோ அல்லது கொச்சையான சொற்களைப் பயன்படுத்தவோ இல்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும்கூட தஃப்ஸீரே கபீரில் اُدۡعُ اِلٰی سَبِیۡلِ رَبِّکَ بِالۡحِکۡمَۃِ என்பதற்கு விளக்கமளித்துள்ளார்கள்.** ஹுஸூர் (ரலி) அவர்கள் மிகவும் ஏக்கத்துடன் இவ்வாறு கூறியிருந்தார்கள்: இந்த உத்தியை முஸ்லிம்கள் புரிந்திருந்தால் அவர்கள் யூதத்துவம் மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றை விழுங்கியிருப்பார்கள். நமது ஆயுதம் திருக்குர்ஆனே ஆகும். அது தொடர்பாக அல்லாஹ், "இந்தக் குர்ஆன் எனும் வாளை எடுத்துக் கொண்டு, உலகத்தோடு போரிடுவதற்குப் புறப்படுங்கள்" என்று கூறுகிறான். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இன்று உலகின் அனைத்துப் பொருட்களும் முஸ்லிம்களின் கைகளில் உள்ளன. ஒரு பொருள் இல்லை என்றால், அது இந்த வாள்தான்! (ஆனால்,) இதை எடுத்துக் கொண்டு புறப்படுமாறு(தான்) அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்!

இன்று இப்பொழுது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணி என்னவென்றால், 'மார்க்கத்தில் வெறும் வரட்டுச் சான்றுகள் இல்லை; மாறாக, அறிவுரை கூறுதலின் பல்வேறு அம்சங்கள் உள்ளன; அவற்றின்படி அமல் செய்ய வேண்டும்' என்ற இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும். பிறகு, கூறினார்கள்: உணர்வுகளைத் தூண்டக்கூடிய விஷயங்களையும் எடுத்து கூறுங்கள். நுட்பமான ஞானத்தோடு அழகிய அறிவுரையையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

பிறகு, அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் நல்ல முறையில் தப்லீக் செய்து வாருங்கள். ஆனால் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அதனால் நமக்கு தப்லீக் செய்யவே தெரியவில்லை என்று முடிவு செய்து நம்பிக்கையிழந்து விடாதீர்கள். ஏனென்றால், உங்களுடைய தப்லீகில் எந்தக் குறையும் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், எதிர்தரப்பின் உள்ளத்தில் அவருடைய பாவங்கள் அதிகமாகத் துரு பிடித்துப் போய் இறைவன் அவருக்கு நேர்வழிக்கான கதவைத் திறக்காமல் இருந்திருக்கலாம்.

சுருக்கமாக, தப்லீகில் மூழ்கி இருக்க வேண்டும். இதுவே அசல் விஷயமாகும். நமது பணி தப்லீக் செய்து கொண்டே இருப்பதாகும். விளைவை ஏற்படுத்துவதும், தாக்கத்தை உருவாக்குவதும் இறைவனின் பணியாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நீங்கள் என்னுடைய பேச்சைக் கேட்டுக் கொள்ளுங்கள்! நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! மனிதனின் உரையாடல் உண்மையான உள்ளத்தோடு இல்லை என்றால், அதில் செயலாற்றல் இல்லை என்றால், பிறகு அது தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஹுஸூர் (அலை) அவர்கள் பிறிதோரிடத்தில் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவர் இரட்டை நிலைப்பாடு கொண்டிருக்கக்கூடாது. அப்பொழுதுதான் தப்லீகிலும் பரக்கத் ஏற்படும். பிறகு, அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்: ஒரே விஷயம்தான் இருக்கும். அது ஒரு கோணத்தில் எடுத்துரைக்கப்படும் பொழுது ஒரு நபரை எதிரியாக ஆக்கி விடலாம். இன்னொரு கோணத்தில் எடுத்து வைக்கும் பொழுது அவரை நண்பராக ஆக்குகின்றது. எனவே, وَجَادِلْهُمْ بِالَّتِيْ هِيَ اَحْسَنُ என்பதற்கு ஏற்ப உங்களுடைய அமலை ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த பேச்சு நடையைத்தான் இறைவன் ஹிக்மத் என்று கூறியுள்ளான்.

பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பேசும்போது, சிந்தித்து, சுருக்கமாக, பயனளிக்கும் விஷயத்தைக் கூற வேண்டும். சிறிய ஒரு நகைச்சுவையான விஷயத்தைக் கூறிவிடும்போது, அது நேராக செவியினுள் சென்று விடுகிறது. பிறகு எப்பொழுதாவது சந்தர்ப்பம் அமைந்தால் பிறகு கூறலாம். சுருங்கக்கூறின், மெதுமெதுவாக உண்மைத் தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும்; களைப்படையக்கூடாது. ஆனால், இன்றைய காலத்தில் மக்கள் உலகக் கவலைகளில் மூழ்கியுள்ளார்கள். அவர்களுக்குப் புரிய வைப்பது சிரமமாகும். நம்முடைய செயல் முன்மாதிரி இருக்கும் என்றால், பிறகு தானாகவே மக்களின் கவனம் நம் பக்கம் திரும்பும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:** நினைவில் கொள்ளுங்கள்! ஒவ்வொரு பூட்டிற்கும் ஒரு திறவுகோல் இருக்கும். பேச்சிற்கும் ஒரு திறவுகோல் உள்ளது. அது பொருத்தமான மொழிநடையாகும். அனைவருடனும் ஒரே விதமாகப் பேசக்கூடாது. விஷயத்தை எடுத்துரைப்பவர் தன்னை எவரேனும் இகழ்ந்துரைத்தால், வருந்தக்கூடாது. மாறாக, தனது பணியை செய்து கொண்டேயிருக்க வேண்டும்; களைப்படையக்கூடாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்துக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்:**

எவ்வாறு தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் ஸகாத் ஆகியவை இஸ்லாத்தின் கட்டளைகளாக உள்ளனவோ, அதன்படி அமல் செய்வது எல்லாக் காலத்திலும் அவசியமோ, அதே போன்று, ஜிஹாதும் எப்படிப்பட்ட அமல்களில் ஒன்று என்றால், அதன்படி அமல் செய்வது எல்லாக் காலத்திலும் அவசியமாகும்.

அன்னார் கூறினார்கள்: இப்பொழுது உங்களுடைய ஜிஹாத் என்பது எழுதுகோல் மூலமாக செய்யப்படும் ஜிஹாத் ஆகும். எனவே, இவ்வாறு எழுதுகோலால் ஜிஹாத் செய்யுங்கள். மேலும், உலகத்திற்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், ஒரு பக்கம் அவர்கள் மஹ்தி மஸீஹ் வருவார் என்று ஏற்றுக் கொள்கின்றனர். மறுபக்கம் மறுக்கவும் செய்கின்றனர். நாம் அவர்களின் விவாதங்களை எடுத்துக் கொண்டு அகராதிப் பொருட்களை விவாதிப்பது, சண்டையிடுவது ஆகியவற்றில் அமர்ந்துவிட்டால் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது.

அவர்களிடம் கூற வேண்டியது என்னவென்றால், எங்களுடைய உண்மையான நோக்கம், இஸ்லாத்தை உலகில் மேலோங்க வைப்பதாகும். ஏனென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகத்திற்கும் நபியாகவும் தூதராகவும் ஆகி வந்திருந்தார்கள். இன்று நம்முடைய எண்ணிக்கை உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கை விடக் குறைவாகும். நாம் உலகை இஸ்லாத்தின் கொடியின் கீழ் கொண்டுவராத வரை, நாம் நிறையே வேலைகள் செய்துவிட்டோம் என்று எப்படிக் கூற முடியும்? இன்று இது போன்ற ஜிஹாதை செய்வது நம்முடைய பணியாகும். அப்பொழுதுதான் நம்முடைய ஜிஹாத் வெற்றி பெறும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:*

**முரப்பிகளிடம் நான் கூறுவது என்னவென்றால்,** அவர்களிடம் ஒரு பெரிய பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் ஜமாத்திற்குத் தர்பிய்யத் வழங்குவதோடு மட்டுமின்றி, அந்தத் தர்பிய்யத்தோடு சேர்த்து ஜமாஅத் மக்களை அல்லாஹ்வோடு தொடர்பில் இணைக்க வேண்டும். எங்கு அவர்கள் இதை செய்வார்களோ அங்கு அவர்களுடைய அறிவையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அவர்களை இந்த ஜிஹாதிற்காக ஆயத்தப்படுத்தவும் வேண்டும். அவர்கள் இதை செய்யும் பொழுதுதான் தமது உடன்படிக்கையை முழுமைப்படுத்துபவர்களாக இருப்பார்கள்.

*இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முரப்பிகளுக்குப் பல்வேறு தருணங்களில் வழங்கிய அறிவுரைகளிலிருந்து பின்வரும் முக்கியமான விஷயங்களை எடுத்து வைத்தார்கள்:*

அவர்களிடம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதல், தஹஜ்ஜுத் தொழுகையை நிலைநாட்டுதல், திருக்குர்ஆனை ஆழமாகப் படித்தல், இறைவனை நினைவு கூர்தல், நூல்கள் வாசித்தல் ஆகிய வழக்கங்கள் இருக்க வேண்டும். தவக்குல் இலல்லாஹ் (அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பது) மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். அவர்கள் பொய்யாகப் புகழக்கூடியவர்களாக இருக்கக் கூடாது. பிறகு, மக்களோடு தொடர்புகளை சிறந்ததாக்க வேண்டும். பிறகு, தீமையைத் துணிச்சலோடு தடுப்பதற்கும், நிலையான மனப்பான்மைக்கும் பழக்கம் இருக்க வேண்டும்.

முரப்பிகள் தாம் இதன்படி அமல் செய்யும்போது, ஜமாஅத்திற்குள்ளும் நிச்சயமாக இந்த ஆன்மா உருவாகிக் கொண்டிருக்கும். பிறகு, ஆழ்ந்து கவனம் செலுத்தும் வழக்கமும், அல்லாஹ்வுடன் தொடர்பும் இருக்க வேண்டும். இது நடக்கும் என்றால், இது நடந்தால் பிறகு, ஒரு மாபெரும் புரட்சி ஏற்படும். அதை நம்மால் ஏற்படுத்த முடியும்.

அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இறை அழைப்பாளர்களுக்கும் சரியான அறிவைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! அவர்கள் அல்லாஹ்வோடு தொடர்பை ஏற்படுத்துபவர்களாக இருப்பார்களாக. பிறகு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் சென்றடையச் செய்பவர்களாக இருப்பார்களாக!

اَلْحَمْدُ لِلّٰہِ ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ
سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ
وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ
یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**